செய்திக் குறிப்பு எண்: 007/032023 நாள்: 17/03/2023

<u>பத்திரிகையாளர் அழைப்பு</u>

# அரசுப் பள்ளி மாணவிகளுக்கு தற்காப்புக் கலைப் பயிற்சி தொடக்க விழா

இடம் : **விளையாட்டு மைதானம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஜோலார்பேட்டை**

நாள் : **17.03.2023, வெள்ளிக் கிழமை** நேரம் : **மாலை 4 மணி**

அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது அனைத்துக் கலைகளிலும் சிறந்து விளங்கவேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறது. இன்றைய சூழலில் பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்கென தனிக் கவனம் செலுத்துவதற்காகவே அவர்களுக்கு தற்காப்புக் கலைகளை பயிற்றுவிக்கவேண்டுமென முடிவெடுத்து நடைமுறைப்படுத்தவிருக்கிறது பள்ளிக் கல்வித் துறை.

தற்காப்புக் கலைப் பயிற்சியின் தொடக்க விழா திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மைதானத்தில் மார்ச் 17, 2023 அன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களும் விழாவைத் துவக்கி வைத்து உரையாற்றுகின்றனர்.

நிகழ்வுக்கு திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப தலைமை வகிக்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

இவ்விழாவில் கராத்தே, ஜூடோ, டேக்வாண்டோ, சிலம்பம் போன்ற தற்காப்புக் கலைப் பயிற்சி நிகழ்வுகளை மாணவிகள் நிகழ்த்திக் காட்டுவர். விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழஙங்கப்படும்.

நிகழ்வுக்கு தங்கள் நிறுவனத்தில் இருந்து செய்தியாளர்களை அனுப்பி செய்தி சேகரிக்குமாறு அன்போடு வேண்டுகிறோம்.

ஆணையர்

பள்ளிக் கல்வி